International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

தமிழ் நாடகங்களின் கருத்தியல் பரிமாணங்கள்

கு. இராம்கி
முனைவர்பட்ட ஆய்வாளர்

முனைவர் பா. திருஞானசம்பந்தம்
இணைப்பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்-608002

ஆய்வுச் சுருக்கம்

தமிழில் நாடகம் என்பது மக்களோடு தொடர்புடைய ஒரு கலை வடிவமாகும். தமிழ் நாடகங்களில் பண்பாட்டு, அடையாளம் மற்றும் மாறிவரும் சமூகச் சூழலின் நுணுக்கமான பிரதிபலிப்பை வழங்குகிறது. கதையாடலின் வலிமையான ஊடகமாகத் திகழும் நாடகம் தமிழரின் அடையாளம், பாரம்பரியம் பண்பாட்டு மாற்றத்தின் சிக்கல்களை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான தளமாக விளங்குகின்றது. நாடகங்களை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்வதன் மூலம், உள்ளூர் மக்களின் உணர்வுகளையும், சமூக தாக்கங்களையும் கருத்தில் கொண்டு, பண்பாட்டு கதையாடல்கள் எவ்வாறு வடிவமைக்கப் படுகின்றன, சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

சமூக மாற்றத்தின் பிதிபலிப்பாகவும், ஊக்கியாகவும் விளங்கிய நாடகத்தின் பங்கை இவ்வாய்வு விளக்கமுறையில் பகுப்பாய்வு செய்கின்றது; வேகமாக மாறிவரும் உலகில் தமிழ் அடையாளத்தை தமிழ்நாடகம் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்துகிறது, கேள்விக்குட் படுத்தப் படுத்துகிறது மற்றும் மறுவரையறை செய்கிறது என்பதற்கான ஆழமான புரிதலை வழங்குகிறது. கடந்த இரண்டு (19-20ஆம்) நூற்றாண்டுகளில் வெளியான முக்கிய நாடகங்களை ஆராய்வதன் மூலம், தமிழரின் பண்பாடு மற்றும் சமூக அடையாளத்தை வெளிப்படுத்தல் ஆகியவற்றில் நாடகத்தின் பங்கையும், தமிழ்ச் சமூகத்தின் மாறிவரும் இயக்கவியலையும் பிரதிபலிப்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது.

முதன்மைச் சொற்கள்: பண்பாடு, நாடகம், அடையாளம், மரபு, சமூகம், பிரதிநிதித்துவம்

முன்னுரை

கலைகளின் அரிசி என்று அழைக்கப்படுவது நாடகமாகும். தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்று பிரிவுகளை கொண்டது. இவற்றுள் நாடகம் தொன்மையும், தனிச்சிறப்பும் வாய்ந்தது. இயலும், இசையும் கலந்த கதையைத் தழுவி நடித்து காட்டப்-படுவது நாடகமாகும். எட்டு வகையான உணர்ச்சிகளை ஒருவர் தம்மை தோன்ற நடிப்பது நாடகத்தின் தனிச்சிறப்பாகும். தெருக்கூத்துக்களாக இருந்து, மேடை நாடகமாக மாறி, இலக்கிய நாடகமாக வளர்ச்சிப் பெற்ற நாடகம் காலத்திற்கேற்ப வளர்ச்சி நிலைகளை அடைந்துள்ளது. தமிழ் பண்பாட்டில் முக்கிய அங்கமாக விளங்கும் தமிழ் நாடகம் பல தசாப்தங்களாக குறிப்பிட்ட அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. தமிழ்நாடகங்களின் கதையமைப்புகள் அவை உருவாக்கப்பட்ட காலத்தின் பண்பாட்டு, சமூக, அரசியல்

போன்றவற்றை பிரதிபலிக்கின்றன.

சமூகவியல் பார்வையில் தமிழ் நாடகங் களைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம், அவை பண்பாட்டு மற்றும் அடையாளம் குறித்த கருத்துகளை எவ்வாறு சித்தரிக்கின் றன, எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை புரிந்து கொள்ளமுடிகின்றது. நாடகங்கள் தமிழ்ச் சமூகத்தை வரவேற்கும் சமூக, அரசியல், பண்பாட்டு நடைமுறைகள் அடையாளங்களை பிரதிபலிப்பதன் மூலம் தனிமை பெறும் மற்றும் சமூக வாழ்க்கையை புரிந்துகொள்ள தனித்துவமான ஒரு அடையாளத்தை வழங்குகின்றன.

தமிழ்நாடகங்கள் உலகெங்கும் வாழும் தமிழ் புலம்பெயர் சமூகத்தினரும் தமிழர் களின் பண்பாடு மற்றும் சமூகத்தை வடிவத்தில் முக்கிய பங்காற்றியுள்ளது. அதன் தாக்கம் வெறும் பொழுதுபோக்கைத் தாண்டி மொழி, மதம், அரசியல், பாலினப் பாகுபாடு கள் மற்றும் சமூக இயக்கங்கள் வரை பல துறைகளில் விரிகின்றது. பண்பாட்டு மற்றும் சமூக அடையாளத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதில் தமிழ்நாடகத்தின் பங்கு குறித்து இக்கட்டுரை விளக்கமுறையில் பகுப்பாய்வு செய்கின்றது. மேலும், தமிழ் நாடகங்களின் கருத்தியல் பரிமாணங்கள் காலந்தோறும் சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டு கலாச்சார மாற்றங்களை அடிப் படையாகக் கொண்டு தமிழ் நாடகங்களின் கருத்தியல் பரிமாணங்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரை- யின் நோக்கமாகும்.

கூத்து

பழமையின் சின்னமாகவும் பண்பாட்டின் எச்சமாகவும் விளங்கும் கூத்துக் கலை-யானது நாட்டுப்புற மக்களின் எண்ணங்கள், செயல், பண்பாடு வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டுகிறது. கூத்து என்பது தமிழ் கலாச்சாரத்தின் பழைமையான பாரம்பரிய நாட்டிய இசை நாடகக்கலை ஆகும். இதில் கலைஞர்கள் பாடல், இசை, மற்றும் உடல் அசைவுகள்(அபிநயம்) மூலம் கதைகளை விவரித்துமக்களிடையே நிகழ்த்திக் காட்டுவர். இது பொழுதுபோக்கோடு, நீதி மற்றும் ஆன்மீகக் கருத்துக்களை மக்களுக்குக் கற்பிக்கும் ஒரு ஊடகமாக விளங்குகிறது. இதனை,

இசையில் பிறந்தது ஆட்டத்து இயல்வே
ஆட்டம் பிறந்தது கூத்தினது அமைவே
கூத்தில் பிறந்தது நாட்டியக் கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையே[1]

என, இறைவன் ஆடிய ஆதிக்கூத்தில், உடுக்கையிலிருந்து பிறந்தது ஓசை, ஓசையின் சூலிலிருந்து இசையின் உயிர்ப்பும், அதனின்று ஆட்டமும், ஆட்டத்திலிருந்து கூத்தின் அமைதியும் (ஒழுங்கு) அந்த அமைதியிலிருந்து நாட்டியக் கோப்பும், அவ்வித ஒழுங்கிலிருந்து நாடக வகைகளும் தோன்றின என கூத்து நூலிலுள்ள பாடல் வரிகள் விளக்குகின்றன. கூத்து தொல்காப்பியர் காலத்தில் வளர்ச்சியடைந்து புகழ்ப் பெற்றிருந்தது. என்பதை,

தாவி னல்லிசை கருதிய இடந்தோர்க்கு
ததர் ஏத்திய துயிலெடை நிலையும்
கூத்தரும், பாணரும், பொருநரும், விறவியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றி[2]

என்ற நூற்பாவில் தமிழிசை வளர்த்த கலைஞர்கள் பெற்ற இடம் தெளிவாகிறது. 'கூத்து' என்னும் சொல் 'நாட்டியம்', 'நாடகம்' ஆகிய இரு கலைகளுக்கும் பொதுவானதாக வழங்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் 'கூத்து', 'கூத்தர் என்னும் சொற்கள் காணப் படுகின்றன. சங்க இலக்கியங்களிலும் 'கூத்து' எனும் சொல் மிகுதியாக காணப்படுகின்றன. இதனை,

கூத்தர் ஆடுகளம் கடுக்கும்[3]
இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து[4]
நாட்டியம் நன்னூல் நன்கு கடைப்பிடித்து[5]
நாடகமேத்தும் நாடகக் கணிகை[6]
கூத்தாட்டு அவைக்கறம்[7]

என்று சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. வேடம் புனைந்து இரவு தொடங்கி விடியும் வரை கதை தழுவி ஆடப்படும் நாடகமே கூத்து ஆகும். கூத்து எனும் சொல் முதலில் நடனத்தையும் பின்னர் கதைத்தழுவி வரும் நாடகத்தையும் குறித்தது. கூத்து நடத்தப்பட்ட களத்தையொட்டியே தெருக்கூத்து எனப் பெயர்பெற்றது. நாட்டிய நாடகப் பாணியில் அமைந்த வடிவங்களாகவே இருக்கவேண்டும். பழந்தமிழ் மக்களின் வாழ்வில் சிறப்பான இடம்பெற்ற குரவைக் கூத்து வகையினைப் பற்றி,

வேங்கை முன்றில் குரவை[8]
வெண்மணல் குரவை[9]
பரதவர் மகளிர் குரவை[10]

மன்றுதொறும் நின்ற குரவை[11]

என்னும் சங்க இலக்கிய வரிகளில் கூத்து குறித்த செய்திகளை அறியமுடிகிறது. ஒருவர் மட்டுமே ஆடிய அபிநயக் கூத்து காலந்தோறும் வளர்ந்து பலர் பல வேடங்களில் புனைந்து வந்து மாறி, மாறி ஆடும் நிலைக்குமாறியது. இதனை,

ஆடுங் கூத்தர்வா லாருமி ரொருவழீக்
கூடிங் கோலத் தொருங்குநின் றிலாது[12]

என்று சிலப்பதிகாரத்தில் ஆடுங்கூத்தர் என்று குறிப்பிட்டுள்ளது. கூத்து வகைகளை யும், கூத்தர்களின் தன்மையையும் பல இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. பண்டைத் தமிழகத்தில் பதினொரு வகையான ஆடல் கள் சிறப்புற்று விளங்கின. சிலப்பதிகாரம் பதினொரு வகை ஆடல்களைக் குறிப் பிடுகிறது. மாதவி இந்திர விழாவில் பொது மக்களுக்காக (பொதுவியல்) ஆடிக்காட்டி னாள். இப்பதினொரு ஆடல்களான கொடு கொட்டி, பாண்டரங்கம், அல்லியம், மல்லாடல், துடிக்கூத்து, குடையாடல், குடம், மரக்கால் ஆடல், பேடியாடல், பாவையாடல், கடையம் என்பனவாகும்.

கதையுடன் கூடிய கூத்தே, 'நாடகம்' என்பது தமிழ்வழக்கு. நாடகங்கள் சமுதாயச் சீர்திருத்தங்களின் வலிமையான ஊடகங்க ளாகும். நாடகங்கள் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் தகவல் தொடர்புச் சாதனங்களாக விளங்கின. "நாடகம் என்பது ஒருவன் செய்ததனை ஒருவன் உள்வாங்கிக் கொண்டு பின்னர் அதனைச் செய்து காட்டுவதாகும். இதனால் தான் அது நாடகம் அல்லது நடித்தல் என்று பெயர் பெற்று விளங்கியது"[13] நாடகம் சமுதாயத்தின் வாழ்க்கைமுறையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக விளங்குகிறது.

"மனிதன் மூன்று உணர்ச்சிகளைக் கொண்டுள்ளான். ஒன்று பசி உணர்ச்சி. இரண்டாவது ஆண்பால், பெண்பால், மூன்றாவது விளையாட்டு உணர்ச்சி. இயல்பான இவ்வுணர்ச்சிகளில், விளையாட்டு உணர்ச்சியில் பிறர்செய்வதைப் போல நாமும் செய்து காட்டவேண்டுமென்ற உணர்ச்சி குழந்தைப் பருவம் முதலே நம் மிடம் இருந்து வருகிறது. இந்த விளையாட்டு உணர்ச்சியிலிருந்து எழுந்ததுதான் நாடகம்"[14] கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிப்பதுடன் சிந்தனையைத் தூண்டி கருத்துக்கும் விருந்தளிப்பது நாடகக்கலையாகும்.

நாடக வழக்கு

நாடக வழக்கு என்பது உலகியல் வழக்கு என்னும் இயல்புநிலைக்கு மாறானது. நாடக வழக்கு என்பது புனைந்துரை வகையைச் சார்ந்தது. உலகியல் வழக்கு என்பது உண்மைநிலையின் அடிப்படையில் அமைந்தது. இவற்றுள், நாடக வழக்கு என்பது சுவைபட வருவன எல்லாவற்றையும் ஓரிடத்து வந்ததாகத் தொகுத்து, கற்பனை கலந்து கூறும் முறை யினைச் சுட்டுவதாகும். இதனை,

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்[15]

எனும் நூற்பாவில் 'நாடகம்' என்னும் குறிப்பு இடம் பெற்றுள்ளது. இவ்வடிகளில் பயின்று வரும் நாடக வழக்கு எனும் சொல் அக்காலத்தைய நாடகக் கலை வடிவத்தின் மரபினை உணர்த்துகிறது.

தொல்காப்பியர் காலத்து நாடகக்கலை

நாடகம் குறித்த முதற்குறிப்பினைத் தந்து நிற்கும் தொல்காப்பியர். நாடக வடிவங் களைக் கூத்து, ஆடல் (ஆட்டம்) என்ற இருவகைகளில் அறியத் தருகிறார். வள்ளிக் கூத்து, முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை, வெறியாடல், காந்தள், அமலைக் கூத்து, துடிநிலை, பிள்ளையாட்டு முதலியன தொல்காப்பியர் காலத்து நிகழ்த்துகலை வடிவங்களாகும். மேலும், தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நாடகச் சுவைகள் பற்றிய குறிப்புகளையும் தருகின்றது. இதனை,

கண்ணினும் செவியினும் திண்ணிதின்
உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங்
குரைத்தே[16]

என்னும் தொல்காப்பியச்சூத்திரம் நாடகத் தைச் சுவைப்பதற்கான அடிப்படையாக விளங்கு பவை கண்களும், செவிகளுமே என்கிறது. நாடகம் மட்டுமே கண்ணால் காண்பதற்கும், காதால் கேட்பதற்குமான காட்சிகலையாக விளங்குகிறது. இக்குறிப் பானது நாடகச் சுவைஞர் அல்லது பார்வையாளர் நோக்கில் மிக முக்கியமான செய்தியாகும்.

தமிழ் நாடகங்களின் கருத்தியல்
பரிமாணங்கள்

காலங்காலமாக சமூக சீர்திருத்தம், அரசியல்

விழிப்புணர்வு மற்றும் பகுத்தறிவு ஆகிய - வற்றை மையமாகக் கொண்டு இயங்கி வந்துள்ளன. இவை பொழுதுபோக்கைத் தாண்டித் தமிழ்மக்கள், மொழி, கலாச்சாரம் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும் தங்களை வெளிப்படுத்தியுள்ளன. நாடகங் களின் கருத்தியல் பரிமாணம் என்பது சமூகம், அரசியல், ஆன்மீகம் மற்றும் பண்பாடு சார்ந்த சிந்தனை வெளிப் பாடாகும். இது புராண காலமரபு- களில் தொடங்கி திராவிட மற்றும் அரசியல் விழிப்புணர்வு வரை பல்வேறு காலக்கட்டங் களைக் கடந்துள்ளது.

தெய்வீக் கதைகள்

தெய்வீகக் கதைகள் (புராண, இதிகாச) தொன்மக் கதைகள் மற்றும் பக்திநெறியை அடிப்படையாக் கொண்டு மேடைகளில் நடித்துக் காட்டும் ஆன்மிகக் கதைகள் ஆகும். பக்தி சார்ந்த நாடகங்கள் வழியாக, கம்பராமாயணம், மகாபாரதக் கதைகள் நடிக்கப் பெற்றன. இராமாயணம் இராம பிரானின் ஒழுக்கநெறியை மக்களின் மனதில் பதியச்செய்து நெறிப் படுத்தின. மகா பாரதத்தில் அண்ணன், தம்பிகளின் பாசப் போராட்டம், சூழ்ச்சி, வஞ்சனை, பழியுணர்வு ஆகிவற்றை மக்களுக்கு எடுத்துரைக்கின்றன. மாணிக்கவாசகர் திருவாசகத்தில்,

நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து
நான் நடுவே
வீடு அகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும்[17]

எனத், திருச்சதகத்தில் நாடகம் பற்றி குறிப்பிடுகிறார்.

தமிழ் நாடகங்களில் தொன்மை

சங்க காலத்தில் கூத்து, பாட்டு, நடிப்பு ஆகியவை இணைத்து நாடகக்கலை வளர்ந்தது. சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களில் இதில் சான்றுகள் உள்ளன.

பழந்தமிழரின் பண்பாடு

குடிமக்கள் காப்பியம் எனப் போற்றப்படும் நாடகக்காப்பியமாம் சிலப்பதிகாரம் அக்கால மக்களின் வாழ்க்கைமுறை, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், இயற்கையை வழிபடும் முறை, இந்திரவிழா நிகழ்வுகள், அரசரின், மக்களின் குணநலன்கள், பெண்களின் உயர்வு நிலை, இழிவுநிலை, சமண, பௌத்த மதக் கருத்துக்கள், தோழன், தோழி, உற்றார் உறவினர் போன்ற பல்வேறு பட்ட பண்பு நலன்கள் எடுத்தாளப்பட்டு நாடகம் வாயிலாக மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டன. மேலும், சைவ, வைணவ, சமண, பௌத்த மத ஆதிக்கத்தினால் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள், கல்விமுறையில் ஏற்பட்ட மாற்றங்கள், உணவுமுறை, பழக்க வழக்கங் கள் குறித்தும் மக்களிடையே விழிப் புணர்வைத் தூண்டும் விதமாக நாடகங்கள் அமைக்கப் பெற்றன.

சமூக சீர்திருத்தம் மற்றும் பகுத்தறிவு

பம்மல் சம்பந்த முதலியார், பரிதிமாற் கலைஞர் மற்றும் சங்கரதாஸ் சுவாமிகள் போன்றோர் தமிழ்நாடகங்களுக்கு முறையான வடிவம் கொடுத்தனர். பின் வந்த அண்ணா துரை, கலைஞர் போன்றோர் நாடகங்களை திராவிட இயக்கக் கொள்கைகள், மூடநம்பிக்கை எதிர்ப்பு மற்றும் சமூகநீதி, பெண் விடுதலை போன்ற சீர்திருத்த கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்த்தன. பகுத்தறிவுச் சிந்தனைகளை வளர்ப்பதில் நாடகங்கள் முக்கியப் பங்காற்றின.

சாதி மறுப்பு மற்றும் பெண்கள் முன்னேற்றம்

சாதி முறைகள் மற்றும் சமூகக் கேடுகள் நாடகங்கள் மூலம் கடுமையாக விமர்சிக்கப் பட்டன. பெண் கல்வி மற்றும் மறுமணம் ஆகியவற்றுக்கு ஆதரவான கருத்துக்கள் பரப்பப் பட்டன. பெண்ணானவள் தன்னைச் சுற்றி பின்னப்பட்ட கட்டுப்பாட்டு வலைகளை அறுத்தெறிந்து விடுதலை பெறத்தேவையான கருத்துகள் நிறைந்த நாடகங்கள் வரவேற்கத் தகுந்தனவாகும். அண்ணாதுரையின் நாடகங்கள் சமூகச்சீர்திருத்தத்தோடு அரசியல் விழிப்புணர்வு கருத்துக்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் கருவியாகப் பயன் படுத்தினர்.

மூடநம்பிக்கை எதிர்ப்பு

கடவுள் பெயரால் நடக்கும் ஏமாற்று வேலைகளையும், மூடநம்பிக்கைகளையும், நாடகங்கள் வழி அம்பலப்படுத்தினர்.

வரலாற்று மற்றும் தேசிய உணர்வு

விடுதலைப் போராட்ட காலத்தில், சுதந்திர உணர்வை தூண்டும் வகையிலும், தமிழ் மன்னர்களின் பெருமைகளைச் சொல்லும் வகையிலும் பல நாடகங்கள் எழுதப்பட்டன. வீரபாண்டிய கட்டபொம்மன், இராஜராஜ சோழன் போன்ற வரலாற்று நாடகங்கள் தேசிய மற்றும் மொழி உணர்வை காக்கும் கருத்தியலைச் சுமந்திருந்தன.

தமிழ் நாடகங்களின் வரலாறு தொன்மை யானது மற்றும் அது நாட்டு மக்களின் அக உணர்வுகளை வெளிப்படுத்துவதாகும். சங்க காலத்தின் கூத்துமரபில் தொடங்கி 19 மற்றும் 20ஆம் நூற்றாண்டில் தேசிய உணர்வை வளர்ப்பதில் நாடகங்கள் முக்கியப் பங்கு வகித்தன.

மார்க்சியம் மற்றும் பாட்டாளி வர்க்க சிந்தனைகள்

தொழிலாளர் வர்க்கத்தின் சுரண்டல், ஏழை-பணக்காரன் ஏற்றத்தாழ்வு மற்றும் முதலாளித்துவ எதிர்ப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டு பல முற்போக்கு நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன. ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும், வர்க்கப் போராட்டத் தின் குறியீடாகவும் நாடகங்கள் செயல் பட்டன. மார்க்சியம் மற்றும் பாட்டாளி வர்க்க சிந்தனை என்பது உழைக்கும் மக்களின் உரிமைகள், வர்க்கப் போராட்டம் மற்றும் சமூக சமத்துவத்தை மேடை வழி பேசும் புரட்சிகரமான கலைவடிவமாகும். இது முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு எதிரான குரல், உழைப்பாளர்களின் எழுச்சி மற்றும் விழிப்புணர்வாகிய முக்கிய அம்சங்களை கொண்டுள்ளது.

பெண்ணியம் மற்றும் விளிம்பு நிலை அரசியலமைவு

சமீபத்திய காலகட்டத்தில் நாடகங்கள் (குறிப்பாக நவீன வீதிநாடகங்கள் மற்றும் திறந்தவெளி அரங்கு) பெண்களின் மீதான அடக்குமுறை, குடும்ப வன்முறை மற்றும் பாலின சமத்துவம் பேசுகின்றன. தலித் இலக்கியம் மற்றும் விளிம்புநிலை மக்களின் வாழ்வியலைப்பேசி கருத்தியல் மறுக்கப்பட்ட நீதிக்கான குரலாக நாடகங்கள் ஒலிக்கின்றன.

தமிழ் நாடகங்கள் சமூக மாற்றத்திற்கான சக்தி வாய்ந்த குரலாகவும், பெண்ணிய மற்றும் விளிம்புநிலை மக்களின் வெளிப் பாடாகவும் விளங்குகின்றன. அவை ஆணாதிக்கக் கட்டமைப்புகளை கேள்விக்கு உள்ளாக்குதல் விளிம்புநிலை மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்தல் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்காகக் குரல் கொடுத்தல் போன்ற முக்கியப் பணிகளை செய்துள்ளன.

விளிம்புநிலை அரசியலமைப்பு ஒடுக்கப்பட்டவர்களின் குரல்

சாதிய ஒடுக்குமுறைகள், வர்க்க வேறுபாடு கள் மற்றும் கிராமிய மக்களின் துயரங் களை வீதிநாடகங்கள் மற்றும் நவீன நாடகங்கள் தீவிரமாக பேசின. தங்களின் அரசியல் எதிர்வினைகளையும் எதிர்ப்புக் குரல்களையும் பதிவு செய்ய நாடக வடிவங்களை ஒரு வலிமையான ஆயுதமாகப் பயன்படுத்தினர்.

நாட்டார் மரபு மற்றும் பண்பாட்டு மீட்டுருவாக்கம்

தெருக்கூத்து, கரகம் மற்றும் வில்லுப்பாட்டு போன்ற நாட்டார் கலை வடிவங்கள் வழியாக நவீனமயமாக்கலால் அழிந்து வரும் தமிழர் களின் தொன்மப் பண்பாடு, வாழ்க்கை முறை மற்றும் பூர்வகுடி மக்களின் மரபுகள் மீட்டெடுக்கப்பட்டு நிலை நிறுத்தப் படுகின்றன. எனவே, தமிழ் நாடகங்கள் வெறும் பொழுதுபோக்கு ஊடகமாக மட்டுமில்லாமல், சமூக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய காத்திரமான கருத்தியல் தளமாகவும் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றன.

ஒழுக்க விழுமியங்கள்

அறம், நீதி மற்றும் பக்தி போன்ற ஆன்மீக உண்மையை மக்களுக்கு எடுத்துரைத்தல். தமிழ்நாடகங்கள் மனிதர்களின் நற்பண்புகளை வளர்க்கவும், சமூகத்திற்கு நல்வழி காட்டவும் உதவுகின்றன. அறநெறிகளை போதித்தல், குடும்ப உறவுகளின் மேன்மையை விளக்குதல், தீமைகளைச் சுட்டிக்காட்டி திருத்துதல் ஆகியவை இதன் முக்கிய விழுமியங்களாகும்.

சமூக ஒழுக்கம் மற்றும் பண்பாடு

பெரியோர்களை மதித்தல், பெற்றோர் சொற்படி நடத்தல், உண்மையை பேசுதல், நேர்மையை கடைப்பிடித்தல், தீய பழக்க வழக்கங்களை தவிர்த்து நல்வழி நடத்தல், குடும்ப உறவு மற்றும் ஒற்றுமை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பிறர்துயர் துடைத்தல், ஈகை மற்றும் தியாக உணர்ப்பு, சுயநலமின்மை மற்றும் பொருளாசை அற்ற வாழ்க்கை, நாட்டுப்பற்று, வீரம், நாட்டைக் காக்கும் பற்று, இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை காக்கும் விவேகம், சமுதாயத்தில் சமத்துவத்தை வலியுறுத்தல் போன்றவற்றை ஒழுக்க விழுமியங்களை நாடகங்கள் மற்றும் கதையிலேயே கதைகள் எளியமுறையில் கற்றுக் கொடுக்கின்றன.

வரலாற்றுச் செய்திகள்

பண்டைய மன்னரின் ஆட்சிக்குட் பட்ட

பகுதிகள், வென்று சேர்த்த இடங்கள், போர் நிகழ்வுகள், காலம்தோறும் மாறி வந்த மன்னர்கள் பற்றிய செய்திகள், பல்வேறு சமயத்தவர் களின் ஆக்கிரமிப்பு, மொழி, மதம், இனம், கலாச்சாரம் பற்றிய தகவல்கள், பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், சீர்திருத்தங்கள், மூடநம்பிக்கை ஒழிப்பு, விடுதலைப் போர் பற்றிய செய்திகள், சுதந்திரம் பெற்றபின் நடைபெற்ற நிகழ்வுகள், பாரம்பரிய தகவல்கள், தவிர்க்க வேண்டியவை என யாவும் நாடகம் வாயிலாக புலப்படுத்தப்பட வேண்டிய தகவல்களாகும்.

நகைச்சுவை

இயந்திர மயமான இவ்வுலகில் மக்களின் இயல்பான மனநிலை பாதிக்கப்பட்டு உள்ளது. மனஅழுத்தம், மனச்சோர்வு, மன அமைதியின்மை போன்ற பல்வேறு காரணங் களால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின் றனர். இவர்களை திசைதிருப்பவும், இயல்பான மனநிலைக்கு மாற்றவும், நகைச்சுவை மிகவும் அவசியமாகிறது. எண்வகை மெய்பாடுகளில் ஒன்றான 'நகை' என்பது இயல்புக்கு மாறான நிகழ்வுகளினால், மாறுபட்ட செயல்களினால் தோன்றுவதாகும்.

நாடகம் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள்

தனி மனிதன், குடும்பம், சமுதாயம், சமூகம் என படிப்படியாக விரிவடையும் நிலையில், தனி மனிதன் வழி நன்மை, தீமைகள் உருவாகின்றன. ஆகவே, தனிமனித ஒழுக்கம், பண்புகள், கடமைகள், உரிமைகள், நிகழ்காலம், எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் குறித்த கருத்துக்கள் அடங்கிய நாடகங்கள் வெளிவர வேண்டியது அவசியமாகிறது. தனி மனிதன் சரியாக இருந்தால் அவன் சார்ந்த குடும்பம், சமூகம், சமுதாயம் அனைத்தும் சரியாக இயங்க துவங்கிவிடும். ஆகவே, திருத்தம் தனி மனிதனிலிருந்து தொடக்கம் பெறவேண்டும் எனில் தனிமனித பண்புகள் குறித்த கருத்துகள் நாடகம் மூலம் வெளிப்படுத்தப்படுவது அவசியமாகிறது.

தொகுப்புரை

பழமையின் சின்னமாகவும் பண்பாட்டின் எச்சமாகவும் விளங்கும் கூத்துக் கலை யானது, நாட்டுப்புற மக்களின் எண்ணங்கள், செயல், பண்பாடு வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டுகிறது. தெருக்கூத்து, தமிழ் மரபுக்கலைகளுள் முழுமையான அரங்கக் கலை வடிவமாக நிகழ்த்தப்பட்டுக் கொண்டு வருகிறது. மற்ற கலைவடிவங்களைப் போலவே, தெருக்கூத்தும் நாடக மரபுக்கு ஏராளமான பங்களிப்பைச் செய்துள்ளது. தமிழ் நாடகங்கள் சமூக விழிப்புணர்வு, தேசபக்தி மற்றும் நெஞ்சுரம் ஆகியவற்றை வளர்த்தன. இக்கலைஞர்கள் வெளிப்படுத்திய தியாக மனப்பான்மை, சமூகப் பொறுப்பு மற்றும் சுயநலமற்ற உழைப்பு ஆகியவை தமிழ் நாடகங்களின் முக்கியச் சிறப்புகளாகும்.

துணைநூற்பட்டியல்

1. சாத்தனார், கூத்தநூல், ச.து.சு.யோகியார், சென்னை. (தொகுதி-2 1987) நூற்பா.1
2. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை, புறத் திணை. நூ.29
3. புலியூர்க்கேசிகன், புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்,சென்னை, பா.28
4. சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை, வரி. 3:12 மறுபதிப்பு-2013.
5. மேலது, 3:46
6. மேலது, பதிகம் 15
7. முனிசாமி, வீ. திருக்குறள், வானதி பதிப்பகம், சென்னை,எண்-332,பதிப்பு-1993
8. சோமசுந்தரனார். பொ.வே., நற்றிணை மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, பா.276, முதற்பதிப்பு-1970.
9. சோமசுந்தரனார். பொ.வே., ஐங்குறுநூறு மூலமும் உரையும், சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம், சென்னை, பா.181
10. சாமிநாதையர், உ.வே. மதுரைக் காஞ்சி, கமலாம்பாள் பிரஸ், சென்னை வரி.97-மூன்றாம் பதிப்பு-1932
11. மேலது, 615
12. சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை, வரி. 28, மறுபதிப்பு-2013.
13. மனோன்மணியம், நவீனநாடகம், கழக வெளியீடு, முதற்பதிப்பு-1933, ப.69
14. மேலது, ப.73
15. இளம்பூரணர், தொல்காப்பியம், பொருளதி காரம், கழகவெளியீடு, சென்னை, நூ.53
16. மேலது, மெய்ப்பாட்டியல், நூ.27
17. திருவாசம், எட்டாம் திருமுறை, திருச்சதகம், அறிவுறுத்தல் பத்து, பா.1